69—

பட்டா

***5550—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, கதிரம்பட்டி கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகின்றேன். திருப்பத்தூர் தொகுதி, கதிரம்பட்டி கிராமத்தில், ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா விரைவாக வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பட்டா உடனடியாக வழங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் கையகப்படுத்தப்பட்டது 1981 ஆம் ஆண்டில். அப்போது விண்ணப்பித்தவர்கள் எல்லாம் இப்போது வயதாகி அவர்கள் எல்லாம் கிழவர்களாகி விட்டார்கள். வீடு கட்டி வாழலாம் என்று நினைத்தவர்களுக்கெல்லாம் வயதாகி விட்டது. 27 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வயதான காலத்தில் அவர்கள் எப்படி வீடு கட்டி வாழ்வார்கள்? எனவே, வரக்கூடிய காலங்களிலே ஆதி திராவிட மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அதேபோல, என்னுடைய கதிரம்பட்டி ஊராட்சியில், ஸ்ரீரங்கப்பட்டியிலே ஆதி திராவிட மக்கள் இதுவரை பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அருந்ததிய மக்கள் ஏரியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக பட்டா கேட்டு, பட்டா கிடைக்காதபடியால், இருக்கிற ஊரை விட்டு வேறு ஊருக்குப் போய்விடலாமா என்றெல்லாம் அவர்கள் முடிவு

எடுத்திருக்கிறார்கள். எனவே, நம்முடைய ஆதி திராவிட நலத் துறை விரைந்து பட்டா வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது நிலம் கையகப்படுத்தப்பட்டு, அவை கோர்ட் கேசில் இருந்ததனால், பட்டா வழங்குவதற்குத் தாமதமாகிவிட்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகு, பயனாளிகள் தேர்வுப் பட்டியலில் 13 நபர்கள், ஏற்கெனவே நிலம் இருந்தவர்களுக்கு அந்தக் கிராம சபை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. தனி வட்டாட்சியர்மூலம் அவற்றை ஆய்வு செய்தபோது 13 நபர்களுக்கு நிலம் இருப்பதாகத் தெரிவித்து, அந்த 13 நபர்களை நிராகரித்து, மீண்டும் புதிய நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 40 நபர்களுக்கும் அரசாங்கத்தின்மூலம் கூடிய விரைவில் பட்டா கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், ஸ்ரீரங்கப்பட்டியில் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அதற்கும் அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா. (குறுக்கீடுகள்) Don't disturb me.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தமிழ்நாடு அளவிலே, ஆதி திராவிட மக்கள் மற்றும் பழங்குடி மக்கள் பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? அதிலே பட்டா வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்களால்

வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு வேலூர் மாவட்டத்தில் மட்டும் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 418 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல, 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 27.47 இலட்சம் செலவு செய்யப்பட்டு ஆதி திராவிடர்களுக்கு 340 பட்டாக்களும், பழங்குடி இன மக்களுக்கு 113 பட்டாக்களும் ஆக மொத்தம் 453 வீட்டுமனைப் பட்டாக்கள் வேலூர் மாவட்டத்தில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் ஒரு தாலுகா தலைநகரம். அந்த ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற தனி தாசில்தார் அவர்கள், incharge-ஆக அங்கே இருக்கின்றார்கள். காஞ்சிபுரத்தில்தான் அவர்களுடைய பெரும் பகுதியான பணிகள் இருக்கின்றன, மாவட்டத்திலே. ஸ்ரீபெரும்புதூருக்கு என்று தனி தாசில்தார் பதவி ஏற்படுத்தி, ஆதி திராவிட மக்களுக்கு முழுமையாக பட்டா வழங்குவதற்குரிய வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக காஞ்சிபுரம் வட்டாட்சியர்மூலமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 12 இலட்சம் செலவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, 2007–2008 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், ரூபாய் 6.65 இலட்சம் செலவில், தலைவர் கலைஞர் அவர்களால் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தால் அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்தி அவர்களுக்கு அளிக்கும்போது அந்த நிலச்சுவான்தார்கள் தடையாணையை நீதிமன்றங்களிலே வாங்கிவிடுகிறார்கள். இது தமிழகம் முழுவதும் வாடிக்கையாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எப்படி நெடுஞ்சாலைத் துறையிலே தடையாணை வாங்கமுடியாதோ, அப்படி வாங்கினால் அந்தத் தடையாணையை எப்படி அகற்றுகிறார்களோ அப்படி நிரந்தரமாக ஏழையெளிய மக்களுக்கு அரசு நிலம் கையகப்படுத்தும்போது தடையாணையை வாங்கினால் அதை உடனே அகற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் தனியாரிடம் பேச்சு வார்த்தை மேற்கொண்டு அவர்கள் தடையாணை பெறாத அளவிற்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆலோசனையின்படி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவ்வாறு தடையாணை பெறாத அளவிற்கு துறையின்மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், தேவலாபுரம் ஊராட்சியில் உள்ள, இராமச்சந்திராபுரம் பகுதி மக்களும், மேல் சாணாங்குப்பம் ஊராட்சி, பாண்டிச்சேரி பகுதியில் இருக்கின்ற மக்களும் நீண்டகாலமாக வீட்டுமனைப் பட்டா வேண்டி ஏற்கெனவே, மாவட்ட துணை ஆட்சியர் அவர்களிடத்திலும், தனி வட்டாட்சியர் அவர்களிடத்திலும் மனுக்களைக் கொடுத்து கேட்டுவருகின்றார்கள். அவர்களுக்கு இதுநாள் வரையில் அந்த

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஏனென்று சொன்னால் நிலங்களை கையகப்படுத்தி கொடுக்கவேண்டுமென்று சொல்லி இருக்கின்றார்களேயொழிய, இதுவரை நிலங்களை கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, ஏழையெளிய மக்களுக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த தேவலாபுரம் ஊராட்சியில் இருக்கின்ற அந்த மக்களுக்கும், மேல் சாணாங்குப்பம் ஊராட்சியில் இருக்கின்ற மக்களுக்கும் விரைவில் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அந்தப் பகுதியில் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுப்பதற்கு அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும். புறம்போக்கு நிலங்கள் இல்லாத பகுதிகளில் தனியார் நிலம் இருந்தால் பேச்சுவார்த்தை மூலமாக அதைக் கையகப்படுத்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும், அரசின் வழிகாட்டுதலின்படி அந்த இடம் கையகப்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் *10–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

70—

மீன்வளக் கூட்டுறவுச் சங்கம்

***8957—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—